
திருவள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி - சித்திரை
மார்ச் - மே 2018

ரூ. 8.00



அருள்நெறித்தந்தை அவர்களின் 23வது குருபூசை விழாவில் (29-4-2018)
விஞ்ஞானி டாக்டர். கே. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு
"தவத்திரு குன்றக்குடி அடிகளார் விருது" வழங்கும் நிகழ்வு

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 24-04-2018 ல் நடைபெற்ற உலக அமைதிக்கான
சர்வதேச அணு ஆயுத ஒழிப்புக்கான கருத்தரங்கில் நமது குருமகாசந்நிதானம் அவர்களுடன்
துணைவேந்தர் பேராசிரியர் முனைவர்.பி.மணிசங்கர். காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பேராசிரியர்
முனைவர். எம். செல்வம், பாண்டிச்சேரி பல்கலைக்கழக பேராசிரியர் பி.லாசரஸ் சாம்ராஜ்

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2049 மாதம் : பங்குனி - சித்திரை

மலர் : 32 இதழ் : 3, 4

தொண்டு நெறியே சைவநெறி!

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே"

என்று மணிவாசகப் பெருமான் கரைந்து உருகுகின்றார். ஒப்பற்ற பரம்பொருள் விண்ணில் விரிந்தும், மண்ணில் மறைந்தும், காற்றில் கலந்தும், நீரில் கரைந்தும், நெருப்பில் நிறைந்தும் எங்கும் நீங்காது நிறைந்திருக்கின்றது. பரம்பொருள் அண்ட சராசரங்களைத் தன் ஆளுமையாகக் கொண்டவர். அகிலம் எங்கும் தன் ஆளுமையைக் கொண்டவர் நமக்கு எல்லா உறவுகளுமாக உடனிருந்து வழி நடத்துகின்றார்.

"அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரு ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்று வாய்நீ
துணையாய்என் நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ, இம்முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே!"

அப்பனாக, அம்மையாக, ஐயனாக, அன்புடைய மாமனும், மாமியுமாக, எல்லா உறவுகளுமாய், வழிபாட்டு பொருளாய் மட்டும் அல்லாமல் வாழ்க்கைக்கு வழிகாட்டும் பொருளாயப் பரம்பொருள் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

“முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே”

என்ற மணிவாசகப் பெருமான் வாக்கு எண்ணி இன்புறத்தக்கது.

வயல்வெளிகளில் உள்ள மட்கிய குப்பைக் கூளங்கள் புதிய உணவுப் பயிருக்கு உரமாய் அமையும். பழமை என்பது தாய் என்றும், புதுமை என்பது பழமை என்ற தாய்மை ஈன்ற சேயாகவும் விளங்குகின்றது.

“மார்பாரப்பொழி கண்ணீர் மழைவாருந்
திருவடிவும் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற் றாளே
சார்வான திருமனமும் உழவாரத்
தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்”

என்று வாழ்ந்த அப்பர் பெருமானின் அடிச்சுவட்டில் - நம் மகாசன்னிதானம் காட்டிய தொண்டு நெறியில் இருந்த சமய உலகம் இன்று என்னவாயிற்று?

இன்று நமது பிரார்த்தனைகள் பேரங்களாக மாறி விட்டன. கோவிலுக்கு வந்த ஒருவர் ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்ய ஆசைப்பட்டார். தேங்காய் பழக் கடையில் அர்ச்சனைக்குத் தேங்காயைத் தேடினார். தேங்காய்க் குவியலில் ஒரு தேங்காயைத் தேர்ந்தெடுக்க, பல தேங்காய்களைப் போட்டுப் புரட்டிப் புரட்டி

எடுத்தார். கடைசியில் முற்றிய தேங்காய் ஒன்றைத் தேர்ந்தெடுத்தார்.

அர்ச்சனை செய்ய வந்தவரின் நண்பர் "முற்றிய தேங்காய்தான் அர்ச்சனைக்கு உகந்ததா?" என்று கேட்டார்.

"அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை. அர்ச்சனைக்குப் பிறகு தேங்காயை வீட்டில் சட்னி செய்யப் பயன்படுத்தத்தான் முற்றியத் தேங்காயைத் தேடித் தேர்ந்தெடுத்தேன்" என்றார்.

எல்லாவற்றிலும் நம் தேவைகள், ஆசைகள். சுயநலங்களே உள்ளன.

மரங்கள் இல்லாத மலை:
அலைகள் இல்லாத கடல்:
மலர்கள் இல்லாத நந்தவனம்:
மனிதர் இல்லாத திருவிழா:
இனிப்பு இல்லாத விருந்து:
வாசல் இல்லாத இல்லம்.

எப்படி நினைத்து பார்க்க முடியாதோ, அதைப் போலத் தான் இறைமை உணர்வு இல்லாத மனித சமூகத்தை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

அறநெறியின்படி வாழ்வதுதான் மனித சமூகத்தின் இயல்பு. தன்னலம்தான் மனித சமூகத்தைத் தவறானப் பாதைக்கு அழைத்துச் செல்கின்றது.

"ஹாசர் சிங்கா" என்ற ஆய்வு இதை நமக்குத் தெளிவு படுத்தும். "ஒரு தண்டவாளப் பாதையில் ரயிலை இயக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அப்பொழுது அந்தப் பாதையில் ஐந்து குழந்தைகள் நடந்து செல்கின்றன. மாற்றுப் பாதையில் ஒரு குழந்தை செல்கின்றது. ஐந்து குழந்தைகளைப் காப்பாற்ற ஒரு குழந்தை செல்லும் பாதையில் ரயிலை இயக்க வேண்டும். என்ன செய்வீர்கள்?" என்று கேட்டதற்கு 94% பேர் "ஐந்து

குழந்தைகளைக் காப்பாற்ற ஒரு குழந்தை செல்லும் மாற்றுப் பாதையில் ரயிலை இயக்க 'வேண்டும்" என்று கருத்துத் தெரிவித்தார்கள். அனைத்துச் சமயத்தைச் சேர்ந்தவர்களும், அனைத்துப் பிரிவினரும் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். அன்பின் அடித்தளம்தான் மனித குலத்தின் இயல்பு என்பதை இந்த ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது.

நமது சமயம் அச்சத்தின் எல்லைக்கு அப்பாற்பட்டது. அன்பின் அடித்தளத்தில் அறிவுக் கண் கொண்டு ஆய்வினை நிகழ்த்தியது நம் சமய நெறி: காலத்தால் தொன்மையானது. பழமைக்கும் பழமையானது. புதுமைக்கும் புதுமையானது.

உலகத்திற்கு டார்வின் பரிணாமத் தத்துவம் அறிவிக்கும் முன்பே உயிர்களின் தோற்றுவிப்பை உயிர்களின் பிறப்பு வகையினை பட்டியலிட்டுள்ளனர் தமிழ் அறிஞர்கள்.

தொல்காப்பியர் அருமையாகச் சொல்கின்றார்.

புல்லும் மரமும் ஓரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
நந்தும் முரளும் ஈரறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
சிதலும் எறும்பும் மூவறிவினவே'
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
நண்டும் தும்பியும் நான்கறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
மாவும் புள்ளும் ஐயறிவினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
மக்கள் தாமே ஆறறிவுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

என்றபடிமுறை அறிவு வளர்ச்சிகளின் பாதிப்பேயாகும்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராயப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவரச் சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்..."

என்று அறிவியல் உலகம் அறிவிக்கும் முன்பே, ஆன்மீகத் தளத்தில் உயிர்களின் தோற்றுவிப்பை அறிவித்தது நம் சமய நெறி.

ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர் வரை வீடுபேற்றை அடைவதற்கு வழிகாட்டியது. ஞானத்தின் பயனாகக் கிடைத்த வீடுபேறுகளும் கூட செடிகளும், பறவைகளும், விலங்குகளும் பெற்றுள்ளன. முள்ளிச் செடிக்கு வீடுபேறு கொடுத்த வரலாறும், கரிக்குருவிக்கு உபதேசித்த - வரலாறும், சிலந்தியும் யானையும் பூசித்து வீடுபேறு பெற்ற வரலாறும், உயிர்கள் அனைத்தும் வீடுபேறு அடைந்து இறைவனின் திருவடி நிழலில் இன்ப அமைதி பெறமுடியும் என்பதைக் காட்டுகின்றன.

அதனால் தான் இனிமேல் வினாக்கள் கேட்கா வண்ணம் உச்சத்தைத் தொட்டதால்தான் முடிந்த முடிபு என்று நம் சமய நெறி அழைக்கப்படுகின்றது.

சித்தாந்தச் செந்நெறியை ஆராய்ந்தறிந்துணர்ந்த மேனாட்டறிஞர்கள் அதைச் சிறப்பாகப் பாராட்டியுள்ளனர்.

"as the Choices product of the Dravidian Intelect"

"This System possesses the merits of great antiquity, in the religious world it is heir to all that is most ancient in Southern India. It is a religion of the Tamil people by the side of which other every form is of Comparatively foreign origin. As a System of religious thought as an expression of faith and life, the Saiva Siddhants is by far the best that South India possesses; indeed it would not be rash to include the whole of

India and to maintain that judged by its intrinsic merits, the Siddhants represents the high water mark of Indian thought and Indian life" என்று டாக்டர் ஜி.யு.போப் பாராட்டியுள்ளார்.

உலக மானுடத்தினை உயர்நிலைக்கு அழைத்துச் செல்லும் நம் சமய நெறி கால வெள்ளத்தில் தடைபட்ட பொழுது, மனித குலத்தின் மேன்மைக்காக நம் சமயநெறியை எடுத்துச் செல்ல அருளாளர்களும், ஞானிகளும் தோன்றினர்.

"சொற்கோவும் தோணிப்புரத் தோன்றலும் நம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகரும், முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே
எந்தைபிரான் அஞ்செழுத்தெங்கே" என்பர்.

நாளும் இன்னிசையால் தமிழ்ப்பரப்பிய ஞானசம்பந்தப் பெருமானின் ஞானத்தமிழும், "நாமார்க்கும் குடி அல்லோம" என்று முழங்கிய நாவுக்கரசர் பெருமானின் தொண்டுத்தமிழும், முதலை உண்ட பாலகனைப் பிழைக்கச் செய்த நற்றமிழ்ச் சுந்தரரின் சுந்தரத் தமிழும், உலகத்தின் தலைவனைக் கொற்றாளாய், கூலியாளாய் மண் சுமக்கச் செய்த மணிவாசகரின் பண்சுமந்த தமிழும் இந்த மண்ணில் சமயத்தை நிலைநிறுத்தியது.

வாழ்க்கைக்கு இசைந்து வராத புறநெறிகளுக்கு எதிராக, வாழும் அற நெறியாய் நம் சமய நெறியை நிலை நிறுத்தியது.

"ஆசையறாய், பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய"

என்ற ஸ்ரீகுருஞானசம்பந்தர் அருள்வாக்கை எண்ணிப் பார்க்க வேண்டும்.

செழுந்தமிழ் வழக்கு அயல் வழக்கின் துறை வெல்ல அடித்தளம் அமைத்தார் ஞானசம்பந்தர் பெருமான்.

தமிழில் ஞானசம்பந்தர் தமிழுக்குச் சொன்ன அடைசொற்கள் பெரும் சிறப்புக்குரியவை. நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் தமிழுக்குத் தந்த அடைகளின் பட்டியலைப் பார்த்துப் பிரமித்துப் போகின்றோம்.

அருந்தமிழ், ஆராஅருந்தமிழ், இசைமலிதமிழ், இன்தமிழ், இன்புறுந்தமிழ், உருவாகும் ஒண்டமிழ், உரைசெய் தமிழ், எழுதுமொழித் தமிழ், ஏரினார் தமிழ், ஒளிர்பூந்தமிழ், கலைமலி தமிழ், கலை முத்தமிழ், குலமார் தமிழ், குலவேந்தர் செந்தமிழ், குற்றமில் செந்தமிழ், குன்றாத்தமிழ், சங்கமலி தமிழ், சந்தநிறை தண்டமிழ், சீர் இன்புறுந்தமிழ், ஞாலமல்குந் தமிழ், ஞானத்தமிழ், தண்டமிழ், தலமார்தரு செந்தமிழ், தவமல்கு தமிழ், திருநெறிய தமிழ், தளங்கில் தமிழ், நலங்கொள் தமிழ், நற்றமிழ், நாடவல்லார் தமிழ், மாடமலி தமிழ், பண்ணாருந் தமிழ், பண்ணியல் தமிழ், பல்லுலாம் அருந்தமிழ், பண்பொலி செந்தமிழ், பரவிய தமிழ், பல்பொருள் முத்தமிழ், பல ஓசைத் தமிழ், பாரின் மலிகின்ற புகழ்கின்ற தமிழ், புகழ் வண்டமிழ், பூந்தமிழ், பேரியல் இன்தமிழ் மறைவாருந் தமிழ், முடிவில் இன்தமிழ், விலையுடைய அருந்தமிழ் என்று பட்டியலிருகின்றார்.

சேக்கிழார் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தருக்கு பெரியபுராணத்தின் 4286 பாடல்களில், 1256 பாடல்களையும் பாடுகின்றார். பிள்ளை பாதி, புராணம் பாதி என்று அழைக்கின்ற பெருமையைத் தருகின்றார்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது.
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது

"நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று ஐந்தெழுந்து மந்திரத்தை அன்புடன் அடித்தளத்தில் இட்ட பெருமை ஞானசம்பந்தப் பெருமானையே சாரும்.

"அன்பு சிவம் இரண்டு என்பார் அறிவிலார்
அன்பே சிவம் ஆவது யாரும் அறிகிலார்
அன்பே சிவம் ஆவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

சைவம் அன்பு நெறிதான் என்று அறுதியிட்டு உறுதியிட்டு நால்வர் பெருமக்கள் உலகிற்கு அறிவித்துள்ளனர்.

கடந்த காலத் தலைமுறை ஆலயங்களை, ஆலயம் தழுவிய சமூக வாழ்க்கையை உயிராய்ப் போற்றியது.

தென்காசியில் கோயிலை எழுப்பிய பராக்கிரம பாண்டியன் கல்வெட்டுச் செய்தியைப் படியுங்கள். கண்ணீர் கசியும்.

"அரிகேசரியன் பராக்கிராம மாறன் அரன்அருளால்
வரிசேர் பொழிலணி தென்காசி கோயில் வகுத்து வலம்
புரிசேர் கடற்புவி போற்ற வைத்தேன் அன்புபூண்டு இதனை
திரிசேர் விளக்கு எனக் காப்பார் பொற்பாதம் என் சென்னியதே"

"தென்காசித் திருக்கோயிலில் எதிர்காலத்தில் ஏதேனும் பழுது ஏற்படுமானால், அதை எடுத்து யார் பாதுகாக்கின்றார்களோ, திரிசேர் விளக்கு என தன்னை உருக்கி, தன்னைக் கருக்கி யார் பாதுகாக்கின்றார்களோ அவர்தம் பாதங்கள் என் தலைமீது இருக்கட்டும்" என்றான் பராக்கிரமப் பாண்டியன்.

கல் எல்லாம் பேசும் பொற்சிலைகள் ஆக்கி, மண் எல்லாம் விண்முட்டும் கோபுரங்கள் ஆக்கி, வண்ணங்கள் எல்லாம் உயிர்ப்புடைய ஓவியமாக்கி, கலை பயில் கூடங்களாய் மனித சமூகத்தின் மையங்களாய் ஆலயங்கள் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயின்
நடமாடுக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா

நடமாடுக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அது ஆமே!

மனித குலத்திற்குச் செய்கின்ற தொண்டே கடவுளின் தொண்டு என்று திருமந்திரம் மகாமந்திரமாய் ஒலிக்கின்றது.

"God is in the form of bread to the hunger man
God is in the form of medicine to the deceased person"

பசித்தவனுக்கு உணவாய், நோயுற்றவனுக்கு மருந்தாய் விளங்குகின்ற சமய நெறியைக் காப்போம்!

தொண்டு நெறியே சைவநெறி!
அன்பு நெறியே சைவநெறி!
தோழமை நெறியே சைவநெறி!
சைவநெறியை நாளும் வளர்ப்போம்.

- பொன்னம்பல அடிகளார்

(சென்னையில் நிகழ்ந்த தருமையாதீனம் ஐந்தாவது அனைத்துலக சைவசித்தாந்தமாநாட்டு விழாவில் 11.03.2018 அன்று தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் ஆற்றிய உரை)

— — —

காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் பரிபூரணம்



காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள் பரிபூரணமடைந்தது ஆன்மீக உலகத்திற்கே மிகுந்த பேரிழப்பாகும். அவர்கள் ஆற்றிய ஆன்மீகப் பணிகள் பெரும் சிறப்பிற்குரியவை. காஞ்சி சங்கரமடம் குன்றக்குடி ஆதீனத்தோடு அன்பும் நட்பும் கொண்டது. குறிப்பாக காஞ்சி மகாப்பெரியவர் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்திற்கு எழுந்தருளியுள்ளார்கள். நம் காலத்தில் காஞ்சி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளும் நாம் ஒரு விபத்தில் சிக்கிக்கொண்டு உடல்நலக் குறைவாக இருந்தபோது நமது திருமடத்திற்கு நேரில் வந்து நம்மை நலம் விசாரித்துச் சென்றார்கள்.

அன்பு, நட்பு, மனிதநேயம் ஆகியவற்றின் இலக்கணமாக விளங்கியவர்கள். இன்று அவர்கள் இல்லாமை ஆன்மீக உலகத்திற்கு பேரிழப்பாகும். தமிழ்நாட்டின் ஆன்மீகத் திருப்பணிகளில் அவர்களின் மகத்தான பங்களிப்பு உண்டு. பல குடமுழுக்குப் பெருவிழாக்களில் அவர்களோடு கலந்து கொண்டுள்ளோம். அறநிலையத்துறை உயர்மட்டக் குழு ஆலோசனைக் கூட்டத்தில் அவர்களோடு இணைந்து பணியாற்றியது உண்டு. அந்த வகையில் அவர்கள் ஆற்றிய சிறப்புக்குரிய பணிகளை ஆன்மீக உலகம் என்றும் பேசிக்கொண்டே இருக்கும்.

அவர்களுடைய இல்லாமை ஆன்மீக உலகத்தின் இழப்பாய் இருந்தபோதும் தொடர்ந்து நம்முடைய போற்றுதலுக்குரிய ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆற்றிவருவார்கள் என்ற நம்பிக்கையோடு ஆன்மீக உலகம் தம் பணிகளைத் தொடர வேண்டுகிறோம்.

– சிறப்பாசிரியர்



அரசியல் உலகில் மாதவம்

சிங்கம்புணரி தந்த அறிவுச் செல்வம் முன்னாள் அமைச்சர் மாதவன் அவர்கள் மறைவு அரசியல் பொதுவாழ்வு உலகிற்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும்.

பரிபூரணமான நமது மகாசந்நிதானத்தின்பாலும் நம்மீதும் பேரன்பு கொண்டவர். மிக இளம் வயதிலேயே சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றவர்.

அறிவுக்கூர்மை, நுண்மாண் நுழைப்புலம் மிக்க மதிநலம், செயலாற்றல், எளிமை, நேர்மை, அரவணைப்பு அனைத்தின் ஓர் உருவாய் நிறைந்திருந்தார்.

சிங்கம்புணரிப் பகுதியில் தொழில் வளத்தினைப் பெருக்கினார். சாதி, சமய வேறுபாடு இன்றி அனைவருக்கும் உதவி செய்யும் நல்லிணக்கக் காவலராய் விளங்கினார்.

சட்டமேலவை உறுப்பினர் பொறுப்பினை மகாசந்நிதானம் ஏற்கத் தயங்கியபொழுது ஆன்மீக வளர்ச்சிப் பணிகளுக்காக அப்பொறுப்பினை ஏற்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்து ஏற்க வைத்தார். மகாசந்நிதானத்திற்கு மணிமண்டபம் அமைக்க முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் கோரிக்கை விடுத்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் நிறுவக் காரணமாய் இருந்து நிறைவேற்றினார்.

வழக்கறிஞராய் தம் வாழ்க்கையைத் தொடங்கி பேரறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். போன்ற பல்வேறு அரசியல் தலைவர்களின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்துக்கும் உரியவராக விளங்கினார். மேலும் நமது குருமகாசந்நிதானம் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கினார்.

அரசியல் உலகின் மாதவமாக விளங்கிய அந்த மாமனிதரின் கனவுகளை நனவாக்கப் பாடுபடுவோம்.

நெடுமறம் சுப்பையா



அன்பு உள்ளம்! அருள் உள்ளம்! அரவணைக்கும் தாய் உள்ளம்! அவர்தான் நெடுமறம் சிவத்திரு. சி. சுப்பையா அவர்கள்.

அன்பு, அரவணைப்பு அனைத்தின் இருப்பிடம்தான் நெடுமறம் சி.சுப்பையா அவர்கள்.

இளமையில் வறுமையினை எதிர்த்துப் போராடி வளர்ந்த அந்தத் தனி மனிதரின் வாழ்க்கை வரலாறு இளைஞர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய அரிய பாடமாகும்.

நம் ஆதீனத்தால் "அறமனச் செம்மல்" என்று பாராட்டப் பெற்றவர். எண்ணற்ற நற்பணிகளின் இருப்பிடமாய் விளங்கிய சி. சுப்பையா அவர்கள் நம் ஆதீனத்தின் ஆன்மீகப் பணிகள், உலகத் திருக்குறள் பேரவையின் புரவலராய் ஆற்றிய பணிகள் பாராட்டத்தக்கவை.

திருச்சி திருவானைக்காவல் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி அம்மன் உடனுறை ஜம்புகேசுவரர் திருக்கோயிலின் அறங்காவலராக சிறப்புறப் பணியாற்றியவர். அவர்தம் மறைவு ஆன்மீக உலகிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இறைவனின் திருவடி நிழலில் அவர்தம் ஆன்மா இன்ப அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

அவர்தம் தொண்டுகள் தொடர அவர்தம் அருமைக் குடும்பத்தாரை வேண்டுகிறோம். அவர்தம் மறைவால் துயருறும் அனைவருக்கும் மக்கள் சிந்தனை தம் ஆழ்ந்த இரங்கலைப் பதிவு செய்து கொள்கின்றது.

- சிறப்பாசிரியர்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

பொய்யும் யானும் புறமே போந்தோம்!

இறைவன் உயர்த்தியுள்ள கொடி இடபக் கொடி. இடபம் அறத்தின் சின்னம். எருது கடுமையாக உழைக்கவும் உழைப்பின் பயனை மற்றவர்க்குக் கொடுக்கவும் செய்கிறது. அதுபோல மனிதன் கடுமையாக உழைப்பதையே ஒழுக்கமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பிறருக்காக உழைப்பது நோன்பு, தவம் என்று புறநானூறு கூறும்.

அறம் - தற்சார்பில்லாதது. அதனால் அறம் விலைப்பொருள் அல்ல. அறத்தை விலைப் பொருளாகவும் ஆக்கக்கூடாது. "அறவிலை வாணிகன் ஆய் அலன்" என்று புறநானூறு கூறும். அறம் ஆன்மாவைச் சார்ந்தது. அறம், அகநிலைப் பண்பு, அறம் இம்மையின்பத்தையும் தரும்; மறுமை இன்பத்தையும் தரும். மாணிக்கவாசகர் "பொய்யும் யானும் புறமே போந்தோம்" என்றருளிச் செய்துள்ளார். திருவாசகப் பாடலில் வரும் புறம், அறத்திற்கு எதிரிடையான புறம். இறைவனுடைய திருவடி இன்பத்திற்குப் புறமாய புறம். புறம், உத்தரவாதமும் பாதுகாப்பும் இல்லாத நிலை. அறநெறிக்கு, அன்பு நெறிக்கு எதிரிடையானதெல்லாம் புறம். புறம், பயனற்றவை ஒன்று சேரும் இடம்; அல்லது போடப்படும் இடம். புறம் என்பது "வெளியே" என்ற பொருளும் தரும். "புறஞ்சுவர் கோலம் செய்வான்" என்று பாரதம் கூறும். புறத்தே வந்தபிறகு ஆன்மாவின் நிலை என்ன? தீயவை எல்லாம் புறம். தீயவை எழு பிறப்பும் தீண்டும், தீயைவிடத் தீமை கொடிது. பொருள் கூடத் தீதின்றி வந்தால்தான் பொருள் எனப்படும். அப்பொருள்தான் இன்பந்தரும். நெருப்பு புகையால் மூடப்பட்டுள்ளது. முகம் பார்க்கும் கண்ணாடியும் கூடப் புழுதியால் மூடப்படுகிறது. அதுபோல் தன்னலத்தால் மூடப்பெற்ற ஆன்மாக்கள் சமூகத்திற்குப் புறம்பாம்; அறநெறிக்குப் புறம்பாம்.

இன்ப நெறிக்கு இடையூறு காமமும் சினமும் பொய்யும்! இவை மனிதனை, மனிதக் கூட்டத்திலிருந்து பிரித்துப் புறத்தே தள்ளுகின்றன. புறம், சன்மார்க்கத்திற்கு இசைந்தது அல்ல. ஆன்மா, புறத்தே தூக்கியெறிப்படாதிருக்க வேண்டுமானால் நன்னெறிகளை வாழ்க்கையில்

கடைப்பிடித்து ஒழுக வேண்டும். அவையாவன; ஒப்புரவறிதல், அடக்கம், பொறுமை, சினம் காத்தல் முதலியன. சத்தியத்தையும் நடுவு நிலையையும் பேணுக. புறத்தே தள்ளப்படாமல் சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டுமா? சொர்க்கத்தின் கதவு திறக்க வேண்டுமா? நீ, அறநெறி பற்றிப் பேசுவதை நிறுத்து; அறநெறியில் நட! நீ, அறநெறியில் நடக்க முயன்று வெற்றி பெற்றுவிட்டால் புறமே இல்லை. நீ வாழும் இடமே சொர்க்கம்.

மாணிக்கவாசகர் "புறமே போந்தோம் பொய்யும் யானும்" என்கிறார். ஆம், உண்மை! பொய், சொர்க்கத்திற்குள் புகமுடியாது. அது மட்டுமல்ல. இப்புவிக் கேளத்தில் பொய் வெற்றி பெறாது; நிலை நிற்காது. மனிதன் தவிர்த்துக்கொள்ள வேண்டியவைகளில் பொய் ஒன்று என்பது மாணிக்கவாசகரின் கருத்து. அதனால் "பொய் தான் தவிர்ந்து" என்றார். பொய் என்றால் என்ன? வள்ளுவத்தின் அடிப்படையில் விரிந்த அடிப்படையில் பொய்க்குப் பெருள் கொண்டால் குற்றம் அல்லது நலம் பயப்பனவாக இல்லாதன எல்லாம் பொய் என்று கொள்ளலாம் போலத் தோன்றுகிறது. ஆதலால், பொய் என்பது, மெய் அல்லது உண்மைக்கு எதிரிடையானது என்று பொருள் கொள்ள இயலாது. தீமை செய்யாது நன்மை செய்தல் இவற்றுடன் பொய்யாமையை உடன் வைத்து எண்ணுகிறது. பகவத்கீதை. "பாவம் இயங்க அதன் கைப்பிடியாகப் பயன்படுவது பொய்" என்றான் ஜேம்ஸ் ஆலன்.

பொய், நஞ்சு; இல்லை! பொய் நஞ்சினும் கொடியது. மனித நாகரிகம் தொடங்கிய காலந்தொட்டுப் பொய்யை மறுத்தே வந்துள்ளனர் உலக சிந்தனையாளர்கள். சில நாடுகளில் பொய்க்கு எதிரான சட்டமே இயற்றியிருக்கிறார்கள். துருக்கி நாட்டுச் சட்டத்தில் பொய் சொன்னதாக நிரூபிக்கப்பட்டுவிட்டால் பொய் சொன்னவர்களின் நெற்றியில் நெருப்பில் பழுத்த இரும்புக் கம்பியால் சூடு போடுகிறார்களாம். நமது நாட்டில் சொல்வன்மையால் பொய்யை மெய்யாக்கிவிடுகிறார்கள். மனிதன் வளர, வளர அவனுடைய பொய்யும் வளருகிறது என்பது மாணிக்கவாசகரின் கருத்து. "பொய்மையே பெருக்கி" என்கிறார். பிறந்தவுடன் குழந்தைகள் பொய் கூறுவதில்லை. கூறவும் தெரியாது. ஆனால் வயது வளர, வளர வீடுகளும் வீதிகளும் குழந்தைகளுக்குப் பொய்யைக் கற்றுத் தந்துவிடுகின்றன. அதனால், திருக்குறள் "வாய்மை" என்று ஓர் அதிகாரமே இயற்றியது.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்பது திருக்குறள்.

பொய்யைத் தவிர்க்க என்ன வழி? நாட்டில் செங்கோல் தழுவிய ஆட்சி இருக்க வேண்டும். இன்றைய ஆட்சிமுறையில் பொய்க் கணக்கு, இரண்டாம் கணக்கு என்றெல்லாம் பகிரங்கமாகவே பேசப்படுகின்றன. கருப்புப் பணம் இருப்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால், எங்கும் பொய் அரங்கேறுகிறது. கொடுங்கோல் அரசு அகற்றப்படவேண்டும். பொருள் ஈட்டவும், வைத்துக்கொள்ளவும் சுதந்திரம் வேண்டும். கொடுங்கோன்மை அகன்றால் மட்டும் போதாது. ஆற்றல் வளர வேண்டும். ஆற்றல் பெற்றவர்கள் தற்காப்புக்குப் பொய்யைக் கருவியாகப் பயன்படுத்துவது இயற்கை. சத்தியம் சாகாது.

பொய்யைக்கூட ஓரளவு சமாளிக்கலாம். மெய் போலப் பொய் கூறுபவரை சமாளிப்பது அரிது. இங்ஙனம் மெய்போலப் பொய் கூறுபவர்களைப் பற்றிதான் "பொய்யர் தம் மெய்யும் அஞ்சேன்" என்று மாணிக்கவாசகர் கூறினார். ஆதலால், பொய்களைத் தவிர்த்து வாழாதவர்கள் சொர்க்கத்தை அடைய முடியாது. பொய்யால் புறமேயாகும் தன்மை பெறுவர். பொய்க்குத் துணை "யான்" என்பது. யானும் பொய்யும் புறமே போந்தோம் என்றார். பொய்க்கு யான் துணை ; யானுக்குப் பொய் துணை.

மனிதன் சொர்க்கம் அடையவேண்டுமா? அவன் "யான்", "எனது" என்ற செருக்கு உடையவனாக இருத்தல் கூடாது என்றார் திருவள்ளுவர். இவற்றுள் யான் மிகவும் மோசமானது. "யான்" உறவுக்குப் பகை. நட்புக்குப் பகை; காதலுக்குப் பகை; சமுதாயத்துக்குப் பகை; ஆதலால், "யான்" என்ற செருக்கு அறவே ஆகாது. "யான்", "எனது" என்ற அகந்தை எள்ளளவும் மாறவில்லை" என்பது தாயுமானவர் வாக்கு. "யான்" என்ற செருக்கில் விளைந்த மோதல்களும் கலகங்களும் பலப்பல. "எனது" என்பதால் எழுப்பப்பெற்ற சுவர்களும், போடப்பட்ட வேலிகளும் எண்ணிலடங்கா. பூட்டு வியாபாரிகளின் நம்பிக்கைக்குரிய மூலதனமே "எனது" என்பதுதான்! ஒரு முனிவர் – தூய துறவி – நல்லவராயினும் அவருக்கு வீடு பேறு கிடைக்கவில்லை. அவர் வாயிற் காவலராகிய நந்தீசரிடம் "நான்" வந்திருக்கிறேன் என்று சொன்னதால் இறைவனின் ஆணை "நான்" இழந்தபின் வரட்டும் என்பதாயிற்று! ஆதலால் "பொய்யும் யானும்" சொர்க்கத்தில் புகா. பொய்யும் "யான்" எனும் செருக்கும் உடையவர் சொர்க்கம் புகமுடியாது. புறத்தே தள்ளப்படுதல் உறுதி.

புறத்தேயிருந்து சொர்க்கத்திற்குள் புக அன்பு வேண்டும். அந்த அன்பு மெய்யன்பாக இருக்கவேண்டும். மெய்யன்பு என்று கூறியதால் அன்பிலும் போலி - பாசாங்கு இருப்பது உண்மையாகிறது. மெய்யன்பு என்பது காரண காரியங்களைக் கடந்த அன்பு. தூண்டுதல் தேவைப்படாத அன்பு. அன்பு, அன்புக்காகவே! இந்த அன்பு நெறி நின்று வாழ்வதில் துன்பம் வரினும் அன்பு குறையக்கூடாது. அன்பு வளர வேண்டும்.

இடர்க ளையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடர் உருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்(கு)
அன்பறா தென்னெஞ் சவர்க்கு. (அற்புதத் திருவந்தாதி-2)

என்று அம்மையார் பாடினார்.

இந்த அன்பு நிரந்தரமானதாக இருக்கவேண்டும் என்பது மாணிக்கவாசகரின் பிரார்த்தனை.

பரந்து பல் லாய் மலரிட்டு முட்
டாதடி யே இறைஞ்சி
இரந்தவெல் லாம் எமக் கேபெற
லாம் என்னும் அன்பருள்ளம்
கரந்து நில் லாக்கள் வனே நின்றன்
வார்கழற்(கு) அன்(பு) எனக்(கு)
நிரந்தர மாய்அரு ளாய் நின்னை
ஏத்த முழுவதுமே! (திருச்சதகம்-6)

அன்பு நிரந்தரமானதாக இருக்க வேண்டும். அந்த அன்பும் ஆற்றுப் புனல்போல் கரைகளை - சம்பிரதாயங்களை உடைத்துக் கொண்டு ஓடவேண்டும். அன்பெனும் ஆறு கரை புரள நின்றுயர்ந்தவர்கள் மாணிக்கவாசகரும் கண்ணப்பருமாவர். அச்சமிலாத மாணிக்கவாசகர் அன்பிலாதவரைக் கண்டால் அஞ்சுகிறார். அன்பிலாதவர் உறவு, நட்பு பனைமரத்து நிழலனையது; கானல் நீர் போன்றது. பனைமரத்து நிழலில் வெய்யிலுக்கு ஒதுங்க இயலாது; முடியாது. கானல் நீர் தாகம் தீர்க்காது. அன்பிலாதவருடன் பழகி அவர்களைச் சுமப்பது பைத்தியக்காரத்தனம். அதனால் மாணிக்கவாசகர் "அன்பில்லாதவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சுமாறே!" என்று பாடுகிறார். ஆம்! அன்பிலாதவர் உறவு அஞ்சத்தக்கது. அன்பிலாதவர்கள் ஒழுக்கமுடையவர்ளாகவும் இருக்கமாட்டார்கள்; வஞ்சனை, ஏமாற்று சூது முதலியனவும் கொண்டிருப்பார்கள். ஆதலால், ஒழுக்கமுடையவராக இருக்க

விரும்பினால் அன்புடையவராக வாழ்தல் வேண்டும். மனிதன் தன்னுடன் தொடர்புடையார் மாட்டும், தொடர்பிலாதார் மாட்டும், கடவுள் மாட்டும் அன்பு செலுத்தும் வரை ஒழுக்கமுடையவராக இருக்க விரும்பினால் அன்புடையாராக வாழ்தல் வேண்டும். மனிதன் தன்னுடன் தொடர்புடையார் மாட்டும், தொடர்பிலாதார் மாட்டும், கடவுள் மாட்டும் அன்பு செலுத்தும் வரை ஒழுக்கமுடையவனாக இருப்பான். பரிபூரண அன்புடையோராவதற்கு அறிந்தோ, அறியாமலோ போராடுவதுதான் வாழ்க்கை! அன்பு வளர, வளர அன்பை அனுபவிக்க, அன்பு காட்ட "யான்" என்ற உணர்ச்சியைத் துறந்தேயாக வேண்டும். நாமனைவரும் பின்பற்ற வேண்டிய பண்புகள் அன்பு, அறிவு, பணிவு ஆகியன. அன்பு குறையாமல் வளர வேண்டுமாயின் பணிவு வேண்டும். விரும்பி அன்பு செய்யப் பழகுதல் வேண்டும். அன்பும் நுண்ணறிவும் ஒருசேரப் பெற்றால் எதையும் சாதிக்கலாம். வாணிகப் போக்கில் - வாணிகக் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் அன்பு ஒன்றுக்குப் பத்து மடங்காகப் பயன் தரக்கூடியது. அன்பு தன்னையே கொடுக்கும். உண்மை, அறிவுக்குப் புலனாகாது. அன்புக்கே உண்மை புலனாகும். வாழ்க்கை என்ற கோட்டையை வலிமைப்படுத்த வேண்டுமாயின் அது நட்புறவால்தான் இயலும். அன்பு கொள்வதும், அன்பு பெறுதலும் மனித வாழ்க்கையின் தலையாய கடமை. உலகத்தில் மற்றெல்லாவற்றிற்கும் அழிவுண்டு. ஆனால் அன்புக்கு அழிவில்லை. அன்பிலும்கூடப் பிரிவு வருதல் உண்டு. பிரிவு, சிறிது காலமாக இருந்தால் அன்பு வளரும். பிரிவு நீடித்தால் துன்பந்தரும்; வதைக்கும்.

மாணிக்கவாசகர் தமக்கும், இறைவனுக்கும் இடையில் ஏற்பட்ட பிரிவை நீடிக்க விரும்பாமல் அழுது புலம்பிய புலம்பல்தானே திருவாசகம்! தீங்கிழைத்தவரிடத்திலும் அன்பு காட்டுவதுதான் உண்மையான அன்பு. இங்ஙனம் தீங்கிழைத்தாரிடத்திலும் அன்பு காட்ட மனிதனால்தான் முடியும். அறியாமையாலேயே தீங்கிழைக்கிறான் என்று எண்ண வேண்டும். "அறியாமல் செய்கிறார்கள், மன்னித்து விடுக" என்று இயேசுபெருமான் செய்த பிரார்த்தனையை நினைவிற் கொள்க.

பிறந்தவர்கள் அனைவரும் இறப்பது உறுதி, அதற்குள் ஏன் அன்பில் வறட்சி என்று எண்ணி அன்பு காட்ட வேண்டும். கடவுள் மனிதனுக்கு மட்டும் கொடுத்துள்ள ஒரே ஒரு கொடை அன்புதான்! அன்பு அரும்பொருள். அதனை இழந்தால் திரும்பப் பெறுவது கடினம். அன்பு, உள்ளத்தை உயிருடனும் உயிரை உடலுடனும் பிணைக்கும் ஒரு தளை,

"அறிவு இறைவனைத் தேடுகிறது. அன்புதான் இறைவன் உறைவிடம் என்பதை அறிந்து கொண்டாரில்லை. அன்பு தான் வாழ்க்கைச் சட்டம்! அன்புடன் ஒன்றுவதுதான் விடுதலையும் முக்தியும்" என்றார் இராமதீர்த்தர்.

அன்புடையார் ஆன்மாவைத் தவிர மற்றொன்று அறியார். "மற்றொன்று அறியார்" என்பது கடவுள் பக்தி முதல் சமூக வாழ்க்கை வரை பொருந்தும்.

மெய்யன்பு காட்டும் வல்லமை பெறவேண்டும். அதற்குத் தொண்டு செய்ய வேண்டும். அன்புக்கு அரண் தொண்டு.

பொய்யைத் தவிர்த்தல், "யான்" இழத்தல், மெய்யன்பு காட்டுதல், சிவமும் அன்பும் தவிர மற்றொன்று அறியாதிருத்தல், தொண்டு செய்தல் ஆகியன மேற்கொண்டு ஒழுகினால் திருவருள் சித்திக்கும். மாணிக்கவாசகர் "யானும் பொய்யும் புறமே போந்தோம்" என்றும், "புறம் போகலொட்டேன்" என்றும் பாடுகின்றார். ஆம்! புறம் போதலுக்கா பிறந்தோம்! மனித குலத்திலிருந்து புறம் போகமாட்டோம் என்று உறுதி கொள்வோம். அன்பால் நட்புச் செய்தோரிடமிருந்தும் அன்பு காட்டப் பெற்றவரிடமிருந்தும் பிரியமாட்டோம்! புறம் போக மாட்டோம்! நிச்சயமாகக் கடவுளிடத்திலிருந்து விலக மாட்டோம் என்று உறுதி கொள்வோம்.

புறமே போந்தோம் பொய்யும்
யானும் மெய்யன்பு
பெறவே வல்லேன் அல்லா
வண்ணம் பெற்றேன் யான்
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழி வந்து சிவனே
நின்தாள் சேர்ந்தாரே! (திருச்சதகம்-86)

இன்று, கூட்டுறவு என்பது சாதாரண பணப்பரிமாற்றம் மட்டுமே செய்துவருகிறது. இது தவறு. இதனுடன் ஆளுமை, பண்பாடு ஆகிய பரிமாற்றங்களுக்கும் - வளர்ச்சிக்கும் கூட்டுறவு பயன்படும். பயன்படும்படி இயக்க வேண்டும். - அருள்நெறித்தந்தை

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு

(பேராசிரியர்.முனைவர். சரளா இராசகோபாலன்)

தமிழ்நாட்டில் இறைவனை இருவழிகளில் வழிபட்டனர். அவை 1. விதிநெறி 2. பக்திநெறி அல்லது அன்புநெறி. அபிடேகம், அலங்காரம், வழிபடுமுறை என்பவற்றை அவ்வவற்றிற்குரிய மந்திரங்களைச் சொல்லி வழிபடுதல் விதிநெறியாகும். ஒவ்வொரு செயலையும் என்னென்ன மந்திரங்களைச் சொல்லி எவ்வாறு செய்ய வேண்டும் என்று ஆகம சாத்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளனவோ அந்த முறையில் சிறிதும் வழுவாமல் பூசனை செய்வது விதி வழிபாடாகும். இவ்வழிபாட்டில் செய்யப்படும் சடங்கு முறைகளுக்கும் உச்சரிக்கப்படும் மந்திரங்களுக்கும் முதன்மை தரப்படும். இதில் உணர்வு வெளிப்பாடு இல்லை. பக்தன் இறைமையுடன் ஒன்றும் நிலை இல்லை.

அன்பு நெறியில் சடங்குகட்கு முதன்மை இல்லை. மனத்திற்கும் உணர்வுக்கும் முதன்மை தரப்படும். "அன்புடையார் எல்லாமுடையார்" என்பதற்கு நிலைக்களமாவது. அவரவர்களின் மொழியில் பேசி, பாடி வழிபடலாம்.

திருநாவுக்கரசர், தேவாரத்தில் இருவேறு நெறிகளின் தன்மையை, வேற்றுமையை, உயர்வை ஒரு பாடலில் குறிப்பிட்டுள்ளனர்.

"வேதம் ஓதில் என்? வேள்விகள் செய்கில்என்?
நீதிநூல் பலநித்தல் பயிற்றல் என்?
ஓதி அங்கம் ஓர்ஆறும் உணரில் என்?
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே" (தேவாரம் 5:99.4)

அன்புது நெறிக்கு முதன்முதலில் அழுத்தம் தந்து சிறப்பித்து, அதுவே சிறந்தது, உயிர் நாடியானது என்பதைக் கூறியவர் நாவுக்கரசரேயாவர். அவருக்குப் பின்வந்த நாயன்மார்களும் அன்பு நெறியையே போற்றினர். விதி நெறியில் ஊன்றியவர்களின் மனமோ அன்பு நெறியில் நிலை கொள்ளவில்லை. அதனால் திருஞானசம்பந்தர் இரண்டையும் ஒன்றாக்க முனைந்தார்.

திருநீலநக்கர், அறிவின் வழிப்பட்ட ஆகம நெறியினர். அவர் தன் இல்லத்திலும் ஆதிரைத் திருநாளிலும் கோயிலிலும் இந்நெறியைப் பின்பற்றினார். திருநீலநக்கர் முறைப்படி வழிபடத் தொடங்கும்போது அருகில் நின்று உதவி புரிந்தவர். திருநீலநக்கருடைய ஆகம வழிபாட்டைச் சேக்கிழார்,

"மெய்த்த வாகம விதிவழி வேதகா ரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு நியமமுஞ் செய்தே
யத்தர் அன்பருக் கமுதுசெய் விப்பது முதலா
வெத்திறத்தன பணிகளு மேற்றெதிர் செய்வார்"

என்று அவருடைய தொண்டு முறையினைக் கூறியுள்ளார். சிவனுக்கு உகந்த நாளான திருவாதிரை நாளில் வீட்டில் பூசை முடிந்து, கோயிலுக்குச் சென்று அவயவந்திப் பெருமானை பூசை செய்ய விரும்பினார். ஆகம பூசனைக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக்கொண்டு மனைவியாரோடு கோயிலுக்குச் சென்றார். பூசனைக்கு வேண்டியதை மனைவியார் ஏந்த அவர் அர்ச்சனை செய்தார்.

இந்த இடத்தில் திறனாய்வாளர் அ.ச.ஞானசம்பந்தனார் "ஒரு பெண்மணி கருவறையில் நின்று பூசைக்கு உதவுவது என்பதை எந்த ஆகமமும் அறிவிப்பதாகத் தெரியவில்லை. ஆசார்ய அபிடேகம் செய்யப்பெற்ற சிவவேதியர் தவிர ஏனைய வைதிகர், சிவவேதியர் குடிப்பிறந்தவர் உள்பட எவரும் அர்த்த மண்டபத்திற்கு உள்ளே செல்லுதல் இயலாது அப்படியானால் ஆகம வழியில் செய்யும் திருநீலநக்கர் எவ்வாறு இதனை அனுமதித்தார்" என்ற வினாவை எழுப்பினார். அவர் ஓரளவு அமைதியும் கூறினார். திருநீலநக்கர் தமிழக வேதியராதலின் வேதம், ஆகமம் இரண்டையும் ஏற்றுக் கொண்டார் என்று கூறலாம். இன்றேல் வந்த வேதியர்களுள் சிலராவது வேதங்களுடன் ஆகமங்களையும் ஏற்றுக் கொண்டார் எனலாம்" என்று ஆய்வு செய்துள்ளார். (ப.598-599).

கோயில் கருவறைக்குள் பெண்கள் சென்று இறைவனை வழிபடல் கூடாது என்று இன்றும் கூறப்படுகிறது. 12-ஆம் நூற்றாண்டில் கோயில் கருவறைக்குள் அம்மையார் சென்று தன் கணவருடன் ஆகம முறைப்படி வழிபட்டார் எனல் சேக்கிழார் செய்த பெரும்புரட்சியாகும்.

இறைவன் மேல் சிலம்பி விழும் வரைக்கும் கணவருக்குத் துணையாக அம்மையார் கணவருடன் ஆகம நெறியைப் பின்பற்றினார். இறைவன் மீது சிலந்திப் பூச்சி, விழுந்து இங்கும் அங்கும் ஊர்வதைக் கண்டு தன் வாயால் ஊதிப் போக்கினார். இச்செயலைச் சேக்கிழார்,

"விழுந்த போதிலாங் கயனின்ற மனைவியார் விரைவுற்
றெழுந்த அச்சமோ டிளங்குழ வியில் விழுஞ் சிலம்பி
ஒழிந்து நீங்கிட ஊதிமுன் றுமிப்பவர் போலப்
பொழிந்த வன்பினா லூதிமேற் றுமிந்தனர் போக"

(திருநீலநக்கர் :12)

இறைவர் மீது சிலம்பி விழுந்தவுடன் குழந்தைப் பேறற்ற அம்மையார் தாயாக மாறினார். இறைவர் குழந்தையானார். சிலம்பியை ஊதித் தள்ளிய செயல் அன்பு நெறிப்பட்டது. தாய்மை உணர்வு வழிப்பட்டது.

இறைவன்மேல் எச்சில் படக்கூடாது என்பது ஆகம விதி. ஆகம நெறியில் வழிபாடு செய்யும் திருநீலநக்கர், அம்மையாரின் பதைத்த இச்செயலை "அனுசிதம்" என்று நினைத்தார்.

திருநீலநக்கர், "தம்கண் புதைத்தார்" மற்றிது "செய்ததென்? பொறியிலாய்?" என்று வெகுண்டார். சுதைச் சிலம்பி திருமேனிமேல் விழுந்தபடியினால் அதனை நீக்கத் துமிந்தேன். என்றார். "ஊதிவாய் நீர்பட முயன்றாய்; உன்மையான் இனித் துறந்தனென் என்றார். அதன்பிறகும், நாயனார் குற்றம் நீங்க, பூசை முறைகளை, ஆகம நெறிப்படி முடித்து வீட்டிற்குச் சென்றார். அவர் தன் மனைவியைக் கோயிலில், எவரும் இல்லா நிலையில், இரவு நேரத்தில் தன்னந்தனியாக விட்டு நீங்கி, தன் இல்லத்திற்குச் சென்று கவலையின்றி உறங்கினார். அயவந்திப் பரமர் அவருடைய கனவில் தோன்றினார். வெள்ளநீர்ச் சடையோடு நின்று தன் மேனியைக் காட்டினார்.

"உள்ளம் வைத்துஎமை ஊதிமுன் துமிழ்ந்தபால் ஒழியக்
கொள்ளும் இப்புறம் சிலம்பியின் கொப்புள்" (18)

என்றருளினார். அம்மையார் தாய்மை அருளினால் ஊதிய இடங்களில் சிலம்பியின் கொப்புளம் தோன்றவில்லை. மற்ற இடங்களில் உள்ள கொப்புளங்களைக் காட்டினார். இறைவனுக்கு எத்தனையோ சிறப்புகள் இருப்பினும் புனித நீராகிய கங்கை உள்ள சடையான் என்றார். புனித கங்கை நீர் விழுந்த இடங்களில் கொப்புளம் தோன்றியது. அம்மையாரின் எச்சில் நீர் கங்கை நீரினும் புனிதம் அதனால் கொப்புளம் தோன்றவில்லையாம். விதிவழியே பூசனை செய்த திருநீலநக்கரை விட அம்மையின் அன்பு வழியே சிறந்தது என இறைவனே எடுத்துக் காட்டினான்.

கண்ணப்ப நாயனார் புராணத்திலும் சிவகோசரியாரின் கனவில் வந்த இறைவன், கண்ணப்பன் வாய் உமிழ்ந்த மஞ்சன நீராட்டு நீர், கங்கை நீரினும் புனிதமானது என்றான்.

"உருகிய அன்பு ஒழிவுஇன்றி நிறைந்த அவன்உரு என்னும்
பெருகிய கொள் கலமுகத்தில் பிறங்கி இனிது ஒழுகுதலால்
ஒருமுனிவன் செவிஉமிழும் உயர்கங்கை முதல் தீர்த்தப்
பொருபுனலின் எனக்குஅவன்தன் வாய்உமிழும் புனல்புனிதம்"

என்றான். இறைவன் அறிவு நெறியினும், அன்பு வழியே உயர்ந்தது என்று கனவின் மூலம் திருநீலநக்கருக்கும் உலகினருக்கும் உணர்த்தினான்.

கோயிலில் உள்ள அருள்திருமேனிகளை அன்பில்லாதவர் கல் அல்லது உலோகத்தால் ஆன வடிவாகக் காண்பர். அத்திருமேனியில் ஆண்டவனின் அருள்மேனியைப் பக்தர்கள் கண்டு மகிழ்வர். திருக்கோயில்களில் இருக்கும் திருமேனி "தன்னைச் சிவன் எனவே கண்டார்க்குச் சிவன் உறைவன் ஆங்கே" என்று சிவஞான சித்தியார் என்னும் நூல் கூறியது. இத்தகைய பேரன்பால் கோயிலில் உள்ள திருமேனியில் இறைவனைக் கண்டார் அம்மையார். கண்ணப்பன் ஒப்பதோர் அன்பினை அம்மையாரிடம் காணமுடிகிறது.

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் "மக்கள் சிந்தனை" மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இதழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். "மக்கள் சிந்தனை"யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

– ஆசிரியர்

"மக்கள் சிந்தனை"யில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள் முதலியவற்றில் அமைந்துள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவர்.

– ஆசிரியர்

தொண்ணூற்றாறு தத்துவமும் அப்பர் பாடலும்

(திருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்)

முப்பது முப்பத்தாறு முப்பதும் இடுகுரம்பை
அப்பர்போல் ஐவர் வந்து அதுதருக இதுவிடு என்று
ஒப்பவே நலியலுற்றால் உய்யுமாறறியுமாட்டேன்
செப்பமே திகழுமேனித் திருப்புகலுறனீரே.

– திருநாவுக்கரசர்.

நமது உடம்பில் 96 தத்துவங்கள் உள்ளதாக இந்த அப்பர் பாடல் தெரிவிக்கின்றது. "இவ்வுடம்பாகிய குடிலிலே, தலைவர்களைப்போல ஆட்சிபுரியும் ஐம்பொறிகளும் அவ்வப்போது தோன்றி, அதனைக்கொடு, இதனைவிடு என்று ஒருசேரத் துன்புறுத்துகிறது. அவற்றில் இருந்து தப்பிக்க திருப்புகலூர்ப் பெருமானே! கடைத்தேறும் வழியை அறிய மாட்டேன்" என்று அப்பரடிகள் அருளுவார்.

இந்த 96 தத்துவங்கள் மணிமேகலையில் கூறப்படுகிறது. பௌத்த சமண மதங்கள் கண்ட தத்துவங்களையே திருமூலரும் அப்பரும் வழிமொழிகின்றார் என்பது ஆய்வாளர் கருத்தாகும்*. திருக்குறள் நீத்தார் பெருமையில் தத்துவவுணர்வு தோற்றுவாய் செய்யப்பட்டுள்ளது.

"சுவை ஒளி ஊறு, ஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு"

தத்துவம் என்பது "உளதாம் தன்மை" என்று பொருள்படும். இந்த ஐந்தும்தான் - இதன் கூறுபாடுகள்தான் தமிழர் கண்ட மெய் உணர்வாகும்.

இதனைத் திருவள்ளுவர் முன்மொழிவதால் தமிழர்க்கு முன்பே தத்துவ உணர்வு ஆய்வு இருந்தது என்பதை முன்மொழிவது போல் பரிமேலழகர் உரை விளக்கம் காணத்தக்கதாகும். அப்பரடிகள் திருவாரூர்த் தேவாரத்தில் "ஐயஞ்சின் அப்புறத் தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே" என்று ஐந்தன் கூறுபாடுகளையும் உடன்பட்டுக் கூறி, இதற்கு மேற்பட்டு விளங்குவன் இறைவன் என்றருளுவார்.

---

* திருமந்திரம் சொல்லும் விஞ்ஞான இரகசியங்கள் பக்-67

ஆன்ம தத்துவங்கள் : 5

1.	பூதங்கள்	-	5
2.	ஞானேந்திரியங்கள்	-	5
3.	கன்மேந்திரியங்கள்	-	5
4.	தன்மாத்திரைகள்	-	5
5.	அந்தக்கரணங்கள்	-	4
6.	இதனை உடைய புருடன்	-	1

ஆக - 25 ஆன்மதத்துவங்களாகும்.

96. தத்துவங்கள்

1.	உடலின் வாசல்கள்	-	9
2.	ஆன்மதத்துவங்கள்	-	24
3.	தாதுக்கள்	-	7
4.	கோசங்கள்	-	5
5.	குணங்கள்	-	3
6.	மலங்கள்	-	3
7.	பிணிகள்	-	3
8.	விகாரங்கள்	-	8
9.	ஆதாரங்கள்	-	6
10.	மண்டலங்கள்	-	3
11.	நாடிகள்	-	10
12.	வாயுக்கள்	-	10
13.	அவத்தைகள்	-	5

ஆக மொத்தம் 96

இவற்றின் விளக்கங்களைத் தனியாகச் சிந்திக்க வேண்டியவை

மனித உடல் ஓர் ஆச்சரியமான கருவி. தத்துவங்களின் விளக்கம் - பெயர்கள் வடமொழியில் உள்ளன. இந்த 96 தேக - ஆன்ம தத்துவங்களை எல்லாச் சித்தர்களும் சொல்லியுள்ளனர். திருமூலர்,

"முப்பதும் முப்பதும் முப்பத்தறுவரும்
செப்ப மதிலுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிலுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத்தாரே" - என்று

அருளுவார்.

செப்பமதிலுடைக் கோயிலாகிய இந்த மனித உடம்பில் உயிர்

இருக்கும்போது, இந்த 96 தத்துவங்களும் இயங்குகின்றன; செயல்படுகின்றன. உயிர்போன பிறகு இந்த 96 பேர்களும் ஓட்டம் எடுக்கிறார்களாம். விஞ்ஞான ரகசியங்களை ஆராய்ந்த ஆய்வாளர் தம் நூலில் (Er.Kaliyarajan) அப்பர் பாடல் ஒன்றை வழிமொழிவதுபோல் முடிவுகூறுவது எண்ணத்தக்கது.

"நாம் ஒவ்வொருவரும் ஒருசித்தர்தான்;
அமானுஷ்யங்களைக் கற்பிக்கின்ற
ரசவாதம், கற்பிக்கின்ற காயகல்பம்
கற்கின்ற, சாகாக்கலை கற்பிக்கின்ற
சித்தர்கள் எவரும் இல்லை; வீணாக
அத்தகையவர்களைத் தேடி அலையாதீர்கள்"

என்று ஆய்வுரை கூறுவது எல்லாம்வல்ல சித்தர் வரலாற்றைப் போற்றுவதாகும்.

திருப்புகலூரின் அருளிய திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகைப் பாடல், ஒன்றில் அரிய மெய்மையை - தத்துவத்தை வெளிப்படுத்துகிறார்.

"தத்துவந்தலை கண்டறிவாரிலைத்
தத்துவந்தலைகண்டவர் கண்டிலர்
தத்துவந்தலை நின்றவர்க் கல்லது
தத்துவனலன் தண்புகலூரானே"

என்ற பாடலில் தத்துவங்களின் கூறுபாடுகளை முடிவுபோக கண்டு அறிவார் இல்லை என்றும், முடிவுபோகக் கண்டவர் காணாதவர் என்றும், தத்துவம் தலை நின்றவர்க்கே அல்லது தத்துவவடிவானவன் அல்லன் புகலூர்ப் பெருமான் - என்பது உணர்வின் உச்சமாம்.

ஆகலின் திருக்குறள் நீத்தார் பெருமை 10 குறள்களின் முதல் நான்கு பாட்டாலும், பெருமைக்கு ஏது ஐந்து அவித்தலும், யோகப் பயிற்சியும், தத்துவவுணர்வும் என்பது நீத்தார் இலக்கணங் கூறப்பட்டதையே திருக்குறுந்தொகைப் பாடல் கிளந்து ஓதுவதை நுட்பமாக அறியலாம். அந்த நான்கு குறள்கள் : -

I *உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்*
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து

II *ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்புளார் கோமான்*
இந்திரனே சாலுங் கரி

III *செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*
செயற்கறிய செய்க லாதார்

IV *சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்*
வகைதெரிவான் கட்டேயுலகு

இச்செய்திகளைத் தொகைப்படுத்தி தத்துவ ஆராய்ச்சி செய்து பெருமானைக் காணுபவர் இல்லை என்றும், அப்படி ஈடுபட்டார் பலரும் தத்துவ அளவிலே நின்று தத்துவங் கடந்த பெருமானை அறியாதவராயினர். தத்துவவடிவில் அவன் – சிவபெருமான் அகப்படான் – என்று, வாத வூரரும் "அப்பாலைக் கப்பாலான்" என்று அருளியதும் எணணத்தக்கதாக நிறைவு செய்யலாம்.

உலகத் திருக்குறள் பேரவை
தூத்துக்குடி மாவட்ட கிளையின் மதிப்புமிகு உறுப்பினர்
அபிராமி. ஆ. திருச்சிற்றம்பலம் காலமானார்



உலகத் திருக்குறள் பேரவை தூத்துக்குடி மாவட்டத் தலைவர் திரு. அபிராமி. ஆ. திருச்சிற்றம்பலம் 7.3.2018 புதன்கிழமை காலமானார். அவருக்கு வயது 76. இப்பெருமகனார் உலகத் திருக்குறள் பேரவைப் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டவர். தனிப்பட்ட முறையில் நமது ஆதீனத்தின்பால் பேரன்பு கொண்டொழுகியவர். இவர் மறைவு உலகத் திருக்குறள் பேரவைக்குப் பேரிழப்பாகும். இவர் மறைவு குறித்து "மக்கள் சிந்தனை" வருந்துகிறது.

இப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் குடும்பத்தினருக்கும நண்பர்களுக்கும் "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக் கொள்வதோடு இவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

– ஆசிரியர்

மகத்தான மாமனிதர்
நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன்
காலமானார்



உச்சநீதிமன்ற முன்னாள் நீதி அரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். குன்றக்குடி ஆதீனத்தோடு நெருங்கிய நட்பும், அன்பும், பக்தியும் கொண்டவர். நம்மீது அளப்பரிய அன்பு கொண்டவர். சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக டாக்டர். ராஜாசர் முத்தையாச் செட்டியார் அறக்கட்டளை விருதுக் குழுவில் அவரோடு நாம் இணைந்து பணியாற்றி தக்க தமிழறிஞர்களைப் பாராட்டி விருதுகள் வழங்கிப் பெருமைப்படுத்தும் நல்வாய்ப்பு அமைந்தது.

தென் மாவட்டத் தொழில் மேம்பாடு ஆணையத்தின் தலைவராய் இருந்தபோது, குன்றக்குடிக்கு வருகை தந்து குன்றக்குடி தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு மகிழ்ந்த நிகழ்ச்சி நெஞ்சில் நிழலாடுகின்றது.

அவர் ஆற்றிய ஆன்மீகப் பணிகள், தமிழ் மொழி வளர்ச்சிப் பணிகள், நீதி அரசரின் ஆசனத்தில் அமர்ந்து அவர் ஆற்றிய மனித நேயப் பணிகள் கணக்கில் அடங்கா. அந்த மகத்தான மனிதரின் இழப்பு அவர்தம் குடும்பத்தாருக்கு மட்டுமல்லாது ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்திற்கும் பேரிழப்பாகும்.

அவர் மறைவினால் வாடும் அவர்தம் குடும்பத்தார் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவரின் ஆன்மா இறைவனின் திருவடி நீழலில் இன்ப அமைதி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

– சிறப்பாசிரியர்

தமிழால் முடியும்...!

(கவிச்சுடர். அழகுதாசன், கோவை)

◆◆ *வெற்றிச் சிகரம் வான்தொட்டு உயர*
வாழ்ந்து காட்டுங்கள்
கற்பன வற்றில் நம்பிக்கை யோடு
கடமை ஆற்றுங்கள்!
குற்ற மற்ற வாழ்க்கை வாழ
உழைப்பை மதியுங்கள்
வெற்றி மலர்கள் மண்ணில் பூக்க
என்றும் உழையுங்கள்!

◆◆ *பனைமரம் போல உயர்ந்து நின்று*
பயன்பட வாழுங்கள்
த்ன்னை வளர்த்த தமிழை என்றும்
தாய்போல் பேணுங்கள்
கனிபோல் இனித்து எவரும் இன்புறக்
கனிவாய்ப் பேசுங்கள்
இனிமேல் நமக்குள் பகைமை வேண்டாம்
என்பதைக் கூறுங்கள்!

◆◆ *கற்கக் கசடற நிற்க அதன்படி*
கனவிலும் மறவாதே
உள்ளம் கோயில் உடம்பே ஆலயம்
உண்மை தவறாதே!
நல்ல எண்ணம் நம்மை உயர்த்தும்
நற்றமிழ் படியுங்கள்
எல்லாம் நாம்பெறத் தமிழால் முடியும்
என்பதை அறியுங்கள்!

குன்றக்குடி தந்த அற்புத மனிதர்

மக்கள் பணியே மகேசன் பணி, சாமியும், சமயமும், மக்களின் மேம்பாட்டிற்கே என செந்தமிழ் முழக்கம் செய்த சங்கநாதம், கருப்பும், காவியும் கைகுலுக்கும் என காட்டிய துறவி. மாற்றுக் கருத்துக்கும் மதிப்பளித்தவர். அறம் சார்ந்த அருளுரையாளர். சிறந்த சிலேடைகளை, உயரிய உவமைகளை சரித்திரம் காட்டும் சான்றுகளை, மறை நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி எடுத்தியம்பியவர். பட்டிமண்டபங்களில் வாத, பிரதிவாதங்களை உள்வாங்கி, நடுமுள் நடுங்காத தராசு போல், தன் தீர்ப்பை வெளியிட்டவர். காலத்தால் அழியாத தமிழ் இலக்கியத்திற்கு காவலனாகத் திகழ்ந்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

– கல்வியாளர், எழுத்தாளர்.மகா.பாலசுப்பிரமணியன்,

நன்றி : காரைக்குடி டைம்ஸ், ஏப்.2018

உ



குன்றக்குடி
அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்கோயில்
பங்குனி உத்திரத் திருவிழா

குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் திருக்கோயில் பங்குனி உத்திரத் திருவிழா 21.3.2018 காலை 5.00 மணியளவில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. 22.3.2018 முதல் 30.3.2018 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல் திருநாள் முதல் நான்காம் திருநாள் வரை அருள்தரு சண்முகநாதப் பெருமான் வெள்ளிக் கேடகத்தில் திருவீதி எழுந்தருளினார். ஐந்தாம் திருநாள் மாலை அருமிகு வள்ளிநாயகியார் திருமணம் நடந்தது. இரவு அருள்தரு சண்முகநாதப் பெருமான் புஷ்பரதத்தில் திருவீதி எழுந்தருளினார். ஆறாம் திருநாள் இரவு உருத்ராக்கக் கேடகத்திலும் ஏழாம் திருநாள் தங்கரதத்திலும் எழுந்தருளினார். எட்டாம் திருநாள் இரவு வையாபுரிக்குளம் தெப்பத்தில் எழுந்தருளி அருட்காட்சி நல்கியபின் வெள்ளிரதத்தில் திருவீதி உலா எழுந்தருளினார். ஒன்பதாம் திருநாள் திருத்தேரோட்டவிழா நடைபெற்றது. பத்தாம் திருநாள் உத்திரத் திருவிழா. தீர்த்தவாரி நிகழ்ச்சி நடைபெற்று அன்று அருள்தரு சண்முகநாதப் பெருமான் மயிலாடும்பாறைக்கு எழுந்தருளி அன்பர்களுக்கு திருவருள் பொழிந்து சேர்க்கையானார்.

எல்லாத் திருநாள்களிலும் பால்குடங்கள், பால்காவடிகள், மயில் காவடிகள் எனப் பல்வேறு வகையான காவடிகளும் பத்தாம் திருநாளன்று பறவைக்காவடிகள், அக்கினிக் காவடிகளும், பக்தர்கள் எடுத்து வந்து பிரார்த்தனைகள் நிறைவேற்றினர். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்ட இப்பெருவிழா இனிதே நிறைவெய்தியது.

— — — —

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு – VIII

(தமிழாகரர். தெ. முருகசாமி)

எழுத்தறிய தீரும் இழிதகைமை, தீர்ந்தக்கால் மொழித்திறத்தின் முட்டு அறும் – என்பது ஒரு பழம்பாடல். இதில் சுட்டிய எழுத்து என்றது வெறும் குறில், நெடில் ஆகிய தனி எழுத்தையன்று. எழுத்தாலான சொல், சொல்லாலாகும் தொடர் என்ற வளர்ச்சியில் அமையும் ஒரு மொழியின் பொருள் புலப்பாட்டிற்கான அடிப்படையை எழுத்தே தீர்மானிக்கின்றது என்பதால் ஒட்டுமொத்த ஒரு மொழியின் குறியீட்டை உணர்த்துவதே அந்த எழுத்துதான் என்ப்து கருத்து!

இந்நிலையில் மொழிக்கான அடிப்படையில் உள்ள எழுத்து பற்றிய இலக்கணச் சிந்தனையைச் சிலப்பதிகாரத்தோடு சிந்தித்த நாம் இக்கட்டுரைத் தொடர் முதல் – சொல் பற்றிய இலக்கணத்தைச் சிலம்பின் கதையோடும் கதாப்பாத்திரங்களோடும் பொருத்தி உணர்வோமாக!

ஒருவன், ஒருத்தி என்ற உயர்திணைச் சொற்கள் ஆண் பெண் என்ற கருத்தில் ஒருமையான பொருள்படும். தனித்தனியான இச்சொற்கள், பொதுநிலையில் மரியாதை கருதும் அளவில் ஒருவர் எனப்படும். ஒருவருள் ஒருவனும் ஒருத்தியும் அடக்கம். அதாவது ஒருவனையும் குறிக்கும் ஒருத்தியையும் குறிக்கும்.

இப்படியாகக் குறிக்கும் ஒருவர் என்ற சொல், பலர்பாலுக்குரிய ரகர ஈற்றைப் பெற்றாலும் ஒரு என்ற பகுதியளவில் அந்த ரகரம்(ர்) மரியாதை கருதிய அளவில் ஒருமைப் பொருளையே சுட்டும். அதாவது ஒருவனை அல்லது ஒருத்தியைச் சுட்டும் என்பது மொழி மரபான இலக்கண நிலை. இது பற்றித் தொல்காப்பிய சொல்லதிகாரக் கிளவியாக்க இயல், (27)

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி,
வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கின் சொல்லா றல்ல.

என்ற நூற்பா வழி விளக்குகையில் உயர்திணையில் ஒருவனை அல்லது ஒருத்தியை ஒருவர் எனப் பன்மையில் கூறினாலும் அங்ஙனம் கூறுதல் இலக்கணப்படிப் பலர்பால் பன்மை உணர்த்தாத, மரியாதை கருதிய உயர்திணையான உலகியல் நிலை வழக்குச் சொல்லான ஒருமையாம்.

எனவே ஒருவன் ஒருவராதல்போல் ஒருத்தியும் ஒருவராகலாம். இந்த அமைப்பைத்தான் தொல்காப்பியர் ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி (சொல்) என்றார்.

இதுபற்றிய சிறப்பை நன்னூல் தெளிவாகவே, "ஒருவர் என்பது உயர் இருபாற்றாய்ப் பன்மை வினை கொளும்" என்பதாக (290)க் கூறியுள்ளது.

இதற்குரிய இலக்கியச் சான்றைக் குமரகுருபரர், சிதம்பரச் செய்யுட்கோவையுள், சிவனையும் உமா தேவியையும் ஒருங்கே குறிக்கும் சொல்லாக உள்ள ஒருவர் என்ற சொல்லால் கூறித் துதிப்பதாகக் கூறுவது ஒருவர் என்ற சொல்லுக்குள் ஒருவன், ஒருத்தி அடக்கம் என்ற கருத்தில் கூறப்பட்டதை உணரலாம்.

இறைவனின் ஆண்பாதி பெண்பாதியான வடிவை, "ஒருவன் என்கோ ஒருத்தி என்கோ" எனக்கூறித் திகைக்கும் குமரகுருபரர் இருவர்க்கும் உரித்தாக ஒருவர் என்றோர் சொல் இலதெனில் யான் மற்று என் சொல்லால் கூறித் துதிப்பேன்? எனத் தெளிவுபெறுகிறார் எனில் ஒருவரில் ஒருவன் ஒருத்தி அடக்கம் எனத் தெரிகிறது.

இந்த ஒருவன் ஒருத்தியைப் போலவே அவன், அவள் என்ற சொற்களை அவர் என்ற சொல்லுள் அடக்கி உணரலாம்.

பிறன் – மற்றையான்; பிறள் – மற்றையாள் – எனத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத் தமிழ் அகராதியில் சொற்பொருள்கள் உள்ளன.

பிறன் என்ற சொல் வழக்காறுபோல் பிறள் என்ற வழக்கு மிகுதியும் காணப்படவில்லையாயினும் காணுதற்குரிய ஒரோவழியான உண்மையின் பொருட்டு அச்சொல் பிறன் என்ற ஆண்பாற் சொல்லுக்குப் பெண்பாற் சொல்லாக உணரலாம்.

மேலும் "பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான்" எனக்கூறும் குமரகுருபரர் கூற்றில் உள்ள பிறர் (நீதிநெறி விளக்கம் 19) என்ற சொல் பிறன், பிறள் என்ற ஆண் பெண் பெயர்கள் அடங்கிய பொதுச்சொல் எனலாம். பொதுவாக இப்பிறர் என்பதற்கு "எல்லோராலும்" எனப் பொருள் கூறலாமாயினும் ஒருவனாலோ அல்லது ஒருத்தியாலோ அதாவது பிறனாலோ பிறளாலோ பாராட்டப்பெற வேண்டின் எனச் சிறப்பாகவும் கருத வாய்ப்புள்ளதால் பிறன், பிறள் என்றதன் கூட்டுச்சொல்லே பிறர் எனலாம்.

இங்ஙனம் ஒரோவழி காணும் சிறப்பான பொருள் அடிப்படையில் இளங்கோவடிகள் பிறர் என்ற சொல்லைப் பிறன் பிறள் என்றதன் கூட்டுச்சொல்லாகக் கூறிச் சொல்லிலக்கணத்தின் வழி ஒரு பேருண்மையைக் குறித்தார் எனலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த சதுக்கப்பூதம் தீமை செய்வோரை அழிக்குமாம். அது யார் யாரை அழிக்கும் எனக்கூறும் பெயர் பட்டியலில், "பிறர்மனை நயப்போர்" - ஒருவராகக் கூறப்பட்டுள்ளார்.

பிறர்மனை நயப்போர் - என்றதற்கு அடியார்க்கு நல்லார் உரை எழுதுகையில், "தமது மனவியர் தனிப்பத் தனித்த பிறர் மனைவியரை விரும்பும் துச்சாரிகள்" என்றார். (இந்திரவிழா - காதை 130).

இதை ஒட்டியே இதற்குக் குறிப்புரை எழுதிய உ.வே.சா. பிறர் மனைவியை விரும்பினோர் - என்றார்.

அடுத்து, காப்பிய முடிவில் இளங்கோவடிகள் கூறும் நீதிகளுள் "பிறர்மனை அஞ்சுமின்" என்றதை ஒன்றாகக் கூறுகிறார்.

சுட்டப்பட்ட ஈரிடத்தும் பிறன்மனை எனக்கூறாமல் பிறர்மனை எனக் கூறியதில் பேருண்மை அடங்கிக் கிடக்கிறது.

பிறன்மனை விழையாமை என்றே குறளும், நாலடியாரும், திருமந்திரமும் அதிகாரம் இட்டுக் கூறுகின்றன.

ஆடவருக்கு மட்டும் அறிவுறுத்தப்பட்ட இவ் ஒழுக்கக்கேடு பெண்டிர்பால் சுட்டப்பட வில்லை என்பது சிந்தனைக்குரியது.

பிறனில் விழைந்ததற்காகவே இராமாயணம் எழுந்தது. இராவணனான தலைமைப் பாத்திரத்தைப் போலவே வாலி, விராதன் போன்ற சிறு பாத்திரங்களும் பிறனில் விழைந்ததாக ஆடவரின் ஒழுக்கமின்மைய்யை இராமாயணம் கூறகிறது.

ஆடவரின் இழிவுபோல் பெண்டிரிடமும் இவ்விழிவு உள்ளதாக கூறுதற்கு இராமயாணத்தில் சூர்ப்பநகை இராமனை விரும்புவதான ஒரு நிகழ்ச்சியால் மூக்கறுபடுதலான தண்டனையுடன் காட்டப்பட்டுள்ளது.

ஆக பிறனில் நயத்தல் போலப் பிறள் இல் நயந்த கேடும் ஒருசேர உணரமுடிகிறது.

பிறனில் எனும்போது பிறனின் மனைவி என விளக்கமாகத் தெரிதல்போல் பிறள் இல் என்பதில் பிறளாம் ஒருத்தியின் கணவன் என விளக்கமாகத் தெரியவில்லையாயினும் ஆடவனுக்கான இழிவுபோல் பெண்டிர்க்கும் உண்டு என்பதால், பிறளாம் ஒருத்தியின் இல்வாழ்வானாம் கணவனை இன்னொருவனின் மனைவி விரும்புவாள் எனச் சமமாகக் கருதலாம்.

சங்க இலக்கிய மேல்கணக்கு அகநூல்களில் பிறனில் விழைந்ததாகப் பாடல்கள் இல்லை. ஆடவனுக்கே இல்லாத நிலையில் பிறள் ஒருத்தியின் கணவனை விரும்பியதாகவும் பாடல்கள் இல்லை.

ஆனால் கீழ்க்கணக்கு நூல்களில், இன்னா நாற்பதில் "பிறன் மனையாள் பின்நோக்கும் பேதைமை இன்னா" (8) என்று ஆடவன் பொருட்டும் "இல்லிருந்து தீங்கு ஒழுகுவான் கூற்றம்" என நான்மணிக்கடிகை (82) பெண்ணின் பொருட்டும் இத்தீங்கு நிகழ்வது பற்றிக் கூறுவதால் இந்த ஒழுக்கக்கேடு, ஆண்பெண் இருபாலர்க்கும் உண்டு எனத் தெரிகிறது.

இந்த அடிப்படையில்தான் சங்கம் மருவிய காப்பிய காலத்தில் இளங்கோவடிகள் இச்சமூக இழிவை, ஓர் அறமாகக்கூறி விலக்க முற்பட்டுரைக்கும் விதமாக நீதி உரைக்கும் பகுதியில் ஈரிடத்தும் "பிறர்மனை நயவாமை, பிறர்மனை அஞ்சுமின்" என்றார். இவற்றிற்கான கதைப்பாங்கு வடமொழியில் வால்மீகி - சூர்ப்பநகையைக் கொண்டும் அகலிகையைக் கொண்டும் சுட்டிக்காட்டப்பட்டதுபோல் தமிழில் இல்லையாயினும் கீழ்க்கணக்கில் நீதிகளாக உணர்த்தப்பட்டதால் தமிழர்களுக்கும் இச்சீரழிவு உண்டு என்பதில் ஐயமில்லை எனலாம். அதனால்தான் வள்ளுவர் இதனைச் சுட்டி உரைக்கப் பிறனில் விழையாமை என்றார். நீதிநூல் மட்டுமின்றி ஆன்மீக சாத்திர நூலாகிய திருமந்திரமும் "பிறன்மனை நயவாமை" என்றது.

ஆக ஆணோ பெண்ணோ பிறர்மனை நயத்தல் என்ற சீரழிவு - ஒட்டுமொத்த மானுடத்திற்கான நோய் எனலாம்.

இந்தப் பொதுக்கருத்தைத் தொட்டுத்துலக்குகிறது - மானிடவியல் கூறுகளை மனத்தளவில் நுட்பமாகக் கூறும் தொல்காப்பியம் ஆகும்.

கணவனுக்கும் மனைவிக்கும் ஆகும் குணம் பத்து, ஆகாக் குணம் பன்னிரண்டு. இப்பன்னிரண்டில் கூறப்பட்டுள்ள "ஒப்புமை" என்ற ஒன்றுதான் கணவனுக்கும் மனைவிக்குமான பிறமனை ஒழுக்கச்சீர்கேடாகும்.

அதாவது கணவன் அடுத்தவனின் மனைவியோடு தன் மனைவியை ஒப்பிட்டுப் பார்த்தலும் அவ்வாறே மனைவி அடுத்தவளின் கணவனோடு தன் கணவனை ஒப்பிட்டுப் பார்த்தலும் கூடாதாம். இங்ஙனம் தத்தமக்கமைந்த கணவனை, மனைவியைப் பிற கணவனோடும் மனைவியோடும் பல்வேறாக ஒப்பிட்டுணரின் வாழ்க்கை பாழ்பட்டுவிடும். எந்த ஒப்புமையினும், அனுபவிக்கத் தூண்டும் அழகுணர்ச்சி ஒப்புமையானது - கற்பைச் சூறையாடிவிடும் என்பதால் கணவன் மனைவியர்க்கு ஆகாததாகக் கூறிய நிம்பிரி, கொடுமை என்ற மெய்ப்பாட்டியல் நூற்பாவில் கூறப்பட்ட "ஒப்புமை"யே பிறன்மனை அல்லது பிறள்மனை விரும்பும் இழிவுக்குரிய தடுப்பணையான சொல்லாகும்.

தொல்காப்பியர் கணவன் மனைவியாகிய இருவர்க்குமாகக் கூறினார் என்பதால் பிறனில் விழைதலோடு பிறள் இல் விழைதலும் கூடாதெனக் கணவனுக்கும் மனைவிக்குமாக ஒருசேரக் கூறப்பட்டது என்ற உண்மையை உணரும்போதுதான் தொல்காப்பியர் வழி இளங்கோவடிகள் "பிறர்மனை" எனப் பொதுப்படக் கூறியது ஆணுக்கும் பெண்ணுக்குமான சமநிலை அறிவுறுத்தல் எனலாம். பிறர்மனை என்பதைப் பிறன்மனையாக்கும்போது அடுத்தவன் மனைவி என்னும் பிறள்மனையாக்கும்போது அடுத்தவள் கணவன் என்பதுமாகப் பொருள்படும்.

மேலும் தொல்காப்பிய நூற்பா வழி அதாவது ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி என்றவழி ஒருவர் என்ற சொல்லுக்கு மட்டுமே இலக்கணம் கூறியதாகக் கருதாமல் ஒருவரைப்போல் ஆண் ஒருமை பெண் ஒருமையை ஏதோ ஒரு சிறப்பு கருதி உயர்திணையில் மரியாதை கருதிய பன்மைச்சொல்லால் அவர், பிறர் என்பனபோலக் கூறலாம் என்பது, சொல்லதிகாரப் புறனடை நுற்பாவால் நன்கு உணரக்கிடப்பதும் கட்டுரைக் கருத்துக்கான சான்று எனலாம்.

இலக்கண வளர்ச்சி என்பது காலந்தோறும் உருவாவது என்பதைத் தொல்காப்பயர் உணர்ந்ததால்தான் "ஒருவர்" என்று கூறினாலும் அச்சொல்போல் ஆண்பெண்பொதுமையைச் சுட்டும் பொதுச்சொல் இருப்பின் ஏற்கலாம் என்பதைச் சொல்லதிகார எச்சவியலில்

செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந்து அறியப் பிரித்தனர் காட்டல் (67) என்றார்.

ஆக, தொல்காப்பியர் சுட்டிய பொதுமைப்பண்மைச் சங்க இலக்கியம் முழுமைப்படுத்தவில்லையானாலும் சங்கமருவிய காப்பிய காலத்தில் இளங்கோவடிகள் "பிறர்மனை" என்பதாகச் சுட்டித் தொல்காப்பியப் பதிவைச் செய்தார் எனலாம்.

சிலப்பதிகாரத்தைப் பொறுத்தமட்டில் பிறன் இல்லான் மனைவியை விரும்பியதாக, வஞ்சின மாலை காதையில் இளங்கோவடிகள் பூம்புகாரின் பத்தினி ஒருத்தியைக் கூறும்போது காமுகன் ஒருவன், தன்னைப் பெண்டாள பார்த்ததால் தன் முகத்தைக் குரங்குமுகமாக்கிக் கொண்டு கணவன் வரும்வரை இருந்தாளாம் என்கிறார்.

அடுத்து பிறள் கணவனாகிய கோவலனை வயந்தமாலை வடிவில் வந்த வனசராணி மயக்குவதன்மூலம் தனக்குரிய காமத்தைத் தணித்துக் கொள்ளலாம் என்பதாகக் காடுகாண் காதையில் இளங்கோ ஒரு காட்சியை அமைத்ததன் மூலம் பிறன்மனை நோக்கிய – அதாவது கண்ணகியின் கணவனை நோக்கிய பேதையைக் காட்டினார். இவ்விரண்டாலும் இளங்கோ பிறர்மனை அஞ்சுமின் எனப் பொதுப்படக் கூறிய உண்மையை உறுதிப்படுத்தலாம் என்க! மேலும் இதன் தொடர்ச்சியாக உணரின் – இளங்கோ கூறிய "பிறர்மனை நயவாமை" என்ற கருத்துக்கேற்ப வஞ்சினமாலையின் காட்சியும் "பிறர்மனை அஞ்சுமின்" என்றதற்கேற்ப காடுகாண்காதையின் காட்சியும் பொருத்தமாய் அமைந்துள்ளன எனக் காணலாம்.

மாற்றான் மனைவியைக் காமுகன் நயந்ததற்காகவே காமுகனால் நயக்கப்பட்டவள் குரங்கு முகமாய்த் தன் கற்பினை நிலைநாட்டினாள்.

வயந்தமாலை வடிவில் வஞ்சகமாக வந்த வனசராணியோ கண்ணகியின் கணவனாம் கோவலனின் மந்திரத்திற்கு அஞ்சி நடுங்குவதால் பிறர்மனை அஞ்சுமின் என்ற சொற்குறிப்பின் பொருத்தம் உணர முடிகிறது. இதனால் வனத்தில் திரியும் வனசாரணியானவள் வனத்தில் திரிபவரோடு திரிந்து வாழ்பவள் எனத்தெரிவதால் காமச் சுவையறிந்தவளாவாள்.

இவ்வாறே காமுகனும் காமச்சுவையறிந்தவனாகையால் கற்பரசி ஒருத்தியை நயக்க முற்பட்டான்.

இவ்இருவேறு காட்சிகளால் பிறனும் பிறளும் பிறமனை நயந்த தீமை செய்ததால் இளங்கோ, பிறர்மனை என ஒருவரைக் கூறும் பண்மைக்கிளவியாகக் கூறினார் எனலாம்.

காவிரிக்குப் பாவிரிப்போம் நாம்

(தமிழாகரர். தெ. முருகசாமி)

கன்னக்கோல் சாத்தும் கயமையைக் காலமெலாம்
இன்னலாய்ச் செய்கின்ற கன்னடர்கள் - கன்னலாய்க்
காவிரிமே லாண்மையைக் கண்டதும் காந்துகிறார்!
காவிரிக்குப் பாவிரிப்போம் நாம்!

அணைமேல் அணைகட்டிக் காவிரித் தாயைப்
பிணைக்கைதி போல்சிறைச் செய்தே - கணைஅம்பு
வாய்ச்சொல்லும் வீசியே வஞ்சிக்கும் கன்னடரின்
வாய்ச் சொற்கு நம்பாட்டு பூட்டு!

வம்புதனைச் செய்வதே வாழ்க்கை யாய்க்கொண்டு
கொம்பதனைச் சீவிக் குளிப்பாட்டித் - தெம்புடன்
மாடுபிடி சண்டைக்கு மல்லுகட்டும் கன்னடரைச்
சாடும்நம் சாட்டையடிப் பாட்டு!

நீரின்மே லாண்மையை நீத்திடவே செய்வதற்குப்
பாரினில் கன்னடர்போல் பார்த்ததுண்டோ? - ஏரினால்
நன்செய் விளையாமல் நாசம்செய் வஞ்சகரின்
புன்செயலைப் போக்கட்டும் பாட்டு!

மத்திய மாநிலம் ஆளும் அரசுகளும்
முத்தமிழ் மேலாண்மைக் காவிரியை - மொத்தமாய்
வஞ்சித்து விட்டதால் வாராது வந்ததைக்
கெஞ்சிப் பெறல்பெருங் கேடு!

பாவிரித்துப் பாடும் பயனாலே பாவலரே!
காவிரிதான் கன்னித் தமிழ்நாட்டில் - பூவிரித்து
நெல்விளைய ஓடிவரும்! நீச்சமுற்ற வேளாணும்
பல்வளம் காணும் பருத்து!

முடைநாற்றம் வீசும் அரசியலும் ஓய
நடைப்பயண வீறும் நயக்கக் - கடைமடையில்
ஆர்ப்பரித்தே ஓடும் அருமைநம் காவிரியால்
ஏர்ப்புடன் வாழ்வோம் இனி!

சிறப்பாசிரியருக்கு கடிதம்....

தவத்திரு குன்றக்குடி அடிகளார் பற்றியும் குருமகா சந்நிதானம் தமிழறிஞர் பொன்னம்பல அடிகளாரைப் பற்றியும், காப்பியக் கவிஞர் மீனவன் அவர்கள் கவிதை வடிவில், தமிழ் வளர்த்த மடம், கல்வி கொடுத்த மடம், பெரியாரை வரவேற்ற மடம், கம்பீரமாக குடை சூழ, புடை சூழ, தமிழ் வடிவமும் அடிகளார் சிறப்புகளை மிக அழகாக, அனைவரும் புரியும் எளிய வகையில் கவிதை புனைந்துள்ளார். அதேபோல் புதுச்சேரி கவிஞர் உரு. அசோகன் அவர்கள் "மாண்பமை குன்றக்குடியார் வாழியவே" எனும் தலைப்பிட்டு 32 வரிகளில் அடிகளாரின் எல்லா சிறப்புகளையும், சிறப்புடன் விளக்கியுள்ளார். அலை பெரிதா? மழை பெரிதா? என்று ஆய்வு ஏற்பட்டபோது குறளில் மலை பெரிது, ஆனால் அது இராயிரம் ஆண்டில் அழிந்துவிடும். அலை, அழியாது அலை வீசிக்கொண்டே முயற்சியோடு இருக்கும் என பொன்னம்பல அடிகளார் குறிப்பிட்டது தொலைநோக்கு சிந்தனை.

– **வ. பழனிக்குமார்**, கண்டவராயன்பட்டி

"மக்கள் சிந்தனை"யில் அனைத்துக் கட்டுரைகளும் பலவித பழச்சுவைகளாக ருசித்தாலும் பெயருக்கேற்ப தலையங்கம், இதழின் சிரசாகவே ஒளிர்கிறது.

மாதங்களில் மார்கழி – மாசியான இதழின் தலையங்கத்தில் பொன்னம்பல ஜோதியாக விளங்கியது, வள்ளுவ ஆசானின் "மருந்தாகி" குறளுக்கு அமைந்த விளக்கம் விழிகளை உயர்த்தி வியக்க வைத்தன, குறள் போலவே அந்த இருவரிகள்! ஆம் அடுத்த அதிகாரத்தில் வரும், "வறியார்க்கொன்று ஈவதே" குறளைத்தான் யாவரும் மேற்கோளாக விளக்குவர்... அடிகளாரின் தேர்வு அருமை...

தெளிந்த புலமையுடன் கூடிய அடிகளாரின் விளக்கங்களை, மகாசந்நிதானமாகிய குருவருளால் வற்றாது தொடர்ந்து வாசகர்கள் பெற்று பயன்பெற இறையருளை வேண்டுகிறேன்.

"வாசிப்பே சுவாசிப்பு" எனும் நெறியைத் தொடர்ந்து மக்கள் சிந்தனையைப் போல் வருகையில் ஓர் எண்ணம் தோன்றுகிறது...

- கலைமாமணி.நெல்லை. **ஆ. சுப்பிரமணியன்**, திருச்சி.

நடப்புத் திங்கள் நம் "மக்கள் சிந்தனை" இதழ் "அறிக அறிவியல்" இதழ் இரண்டிலும் சமுகம், "கோடிகொடுத்த கொடைஞன், குடியிருந்த வீடும் கொடுத்த விழுத்தெய்வ" மாக விளங்கும் அழகப்பர் - அவர்கள், தமது கல்லூரி வளாகம் எங்கும் மாமரங்களை நட்டு வளர்க்கக்கூறிய ஒரு செய்தியறிந்து மகிழ்ந்தேன். இதுபோன்றதொரு நிகழ்ச்சி நம் குன்றக்குடி மேல்நிலைப்பள்ளி வளாகத்திலும் நிகழ்ந்தது நினைவுக்கு வந்தது. விவரம் வருமாறு :

முன்பு, மயிலாடும்பாறை ஊருணிக்கு எதிரே இயங்கிவந்த நம் பள்ளி, பின்னர் தற்போதுள்ள சொந்தக் கட்டிடத்திற்கு (1972இல் என்று நினைவு) மாறிய இரண்டு ஆண்டுகளில் ஒருநாள் ஒட்டு மாங்கன்றுகள், பள்ளி வளாகத்தில் வந்து இறங்கின. அன்று மாலை வழக்கம்போல் கைப்பந்து விளையாட வந்து இறங்கிய வணக்கத்திற்குரிய நம் ஸ்ரீலஸ்ரீ அவர்கள் நேரே தலைமையாசிரியர் அறைக்குச் சென்றபோது நானும் உடன் சென்றேன். மாங்கன்றுகள் வந்து இறங்கியுள்ள செய்தி கூறினேன். "நட்டு வளர்க்க வேண்டும் தென்புறத்து வேலி ஓரமாக" என்றார்கள். எனக்குச் சிறிது மகிழ்ச்சியுண்டானபோதும் "மாங்காய்கள் கிடைக்கமாட்டா; வடு அளவிலேயே மாணவர்கள் பறித்துச் சுவைத்துவிடுவார்களே" என்றேன். "சாப்பிடட்டுமே" அதனால் என்ன? "மற்ற பக்கங்களிலும் வைத்து நடுவோம்; வளர்ப்போம்" என்றார்கள். இந்நினைவு சமுகத்தின் கட்டுரையைப் படித்ததும் வந்தது.

இவ்வகையில் "சான்றோர் சான்றோர்பாலர்ஆப" என்ற புறநானூற்று அடி நினைவுக்கு வந்தது என்பதைத் திருவுளக் குறிப்புக்குத் தெரிவித்து மகிழ்கிறேன். **– க. கதிரேசன், பூவாளூர்.**

இன்று உலகம் வளர்ந்திருக்கின்றது. ஊரை, நாட்டை, இணைப்பதில் அறிவியல் வெற்றி பெற்றிருக்கின்றது! மனித இதயங்களை இணைப்பதில் உறவுகள், உணர்வுகள் வெற்றி பெறவில்லை. வாழ்வாருக்கு இசைபாடுகின்ற கூட்டம்தான் பெருகி உள்ளது. துன்பப் புயலில் சிக்குண்டவருக்கு இதம்தரும் இதயத்தைத்தான் காணோம். இன்று குடும்பங்கள் வசிக்கின்றன. வாழவில்லை. வசிப்பை, மனிதர்களைத்தவிர, மற்ற இனங்கள்தான்! மனிதன் மட்டும்தான், வாழப்பிறந்தவன். ஆனால், அவனுக்கு வாழத் தெரியவில்லை. பிழைக்கத் தெரிகின்றது.

– தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மனிதகுலத்தின் மிகப்பெரிய அவலம் என்பது ஒரு சிலரின் கொடுஞ்செயல்களல்ல. அவற்றைப் பொறுத்துக் கொண்டிருக்கிற பெரும்பான்மையினரின் மௌனமே.

– மார்ட்டின் லூதர் கிங்

மக்கள் சிந்தனை

உரிமை – பதிப்பு அறிக்கை

1.	இதழின் பெயர்	:	மக்கள் சிந்தனை
2.	மொழி	:	தமிழ்
3.	வெளியீடு	:	திங்கள் இதழ்
4.	வெளியீடு இடம்	:	குன்றக்குடி – 630 206
5.	ஆசிரியர்	:	மரு. பரமகுரு
	உரிமை	:	திருவண்ணாமலை ஆதீனம்,குன்றக்குடி
6.	பதிப்பாளர்	:	பழ. பாண்டித்துரை
	அச்சகம்	:	சண்முகநாதன் அச்சகம், மேலரதவீதி, குன்றக்குடி.
7.	பதிவு	:	செய்தி இதழ்

மேற்கண்ட விவரம் யாவும் உண்மை என்றும், நம்பத் தகுந்தவை என்றும் உறுதி கூறுகிறேன்.

நாள் : 8.5.2018

மரு. பரமகுரு

உலகத்திருக்குறள் பேரவை – தூத்துக்குடி கிளையின் சார்பில் கல்வித்தந்தை

அரிமா ஆ. திருச்சிற்றம்பலம் படத்திறப்பு விழா

மகளிர் கருத்தரங்கம்

உலகத் திருக்குறள் பேரவை, தூத்துக்குடி மாவட்டக் கிளையின் தலைவரும், சி.எம்.மேனிலைப்பள்ளி தாளாளருமான கல்வித்தந்தை அரிமா ஆ. சிற்றம்பலம் அவர்களின் திருஉருவப்படத்திறப்பு விழா முன்னாள் மாநில வங்கியின் மேலாளர் தனராசு தலைமையில், முன்னாள் மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மருத்துவர் த. இராசலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது. ஆசிரியர் தேவிகா வரவேற்றுப் பேசினார். சைவநெறி காந்தி, அமரர் திருச்சிற்றம்பலம் திருஉருவப்படத்தைத் திறந்து வைத்தார். பேராசிரியர் ச.சவகர்லால், மாவட்டச் செயலாளர் "முத்துநகர்" மோ. அன்பழகன், பேராசிரியர் அழகேசன், கந்தசாமி, தனபாலன், ஓய்வூதியர் சங்கத் தலைவர் நாராயணா, அறிவுச் செல்வம், துறைமுகம் முருகேசன் ஆகியோர் இரங்கல் உரையாற்றினார்கள்.

பிறகு மகளிர் கருத்தரங்கம் பேராசிரியர் சோ.குருலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. குறள் பார்வையில் காவிய மகளிர் என்னும் தலைப்பில் பேராசிரியர் சுப்புலெட்சுமி மண்டோதரி என்னும் தலைப்பிலும், பேராசிரியர் சரோஜா, மாதவி என்னும் தலைப்பிலும்,செல்வி பொன்.மேனகா கண்ணகி என்னும் தலைப்பிலும், செல்வி ஜெயபிரபா சானகி என்னும் தலைப்பிலும் உரையாற்றினார்கள். கவிஞர் இளமுருகு நன்றி கூறினார்.

இவ்விரு நிகழ்ச்சிகளிலும் புலவர் சங்கரலிங்கம், கனகலெட்சுமி, ஆசிரியர் பூபாலசெல்லையா, நீதிச்செல்வன், செய்யது முகமது செரிப், தபராசு, பொன்னம்பலம், கணேசன், விசுவநாதன், கிருஷ்ணன், பொன்அமிர்தவள்ளி தாழை மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் :

1. கல்வித்தந்தை அரிமா ஆ. திருச்சிற்றம்பலம் அவர்களின் மார்பளவு சிலையை சி.எம்.மேனிலைப்பள்ளி வளாகத்தில் உலகத் திருக்குறள் பேரவையின் சார்பில் அமைப்பது என்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. உலகத் திருக்குறள் பேரவை தூத்துக்குடி மாவட்டக் கிளையின் தலைவராக பேராசிரியர் சோ. குருலெட்சுமி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

45 ஆவது குருமகாசந்நிதானம்

திருப்பெருந்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக

பரமாசாரிய சுவாமிகள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின்

23ஆம் ஆண்டு குருபூசை விழா



திருவள்ளுவராண்டு 2049 சித்திரைத் திங்கள், 16ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை சித்திரை நட்சத்திர திருநாளன்று (29.4.2018) ஆதீனத் திருமடத்தில் அன்று காலை 8.00 மணியளவில் அருள்தரு காளத்திநாதர் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது.

காலை 10.00 மணயளவில் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் விஞ்ஞானி டாக்டர் கே. பாலகிருஷ்ணன் அவர்களுக்கு 46வது குருமகாசந்நிதானம் அவர்கள் "**தவத்திரு குன்றக்குடி அடிகளார் விருது**" வழங்கிச் சிறப்பித்தார்கள். அருள்திரு கோவிந்தானந்தா சுவாமிகளும், டாக்டர்.S. மோகன் அவர்களும் பாராட்டுரை வழங்கினர்.

பகல் 12 மணியளவில் அருள்நெறித்தந்தை குருமூர்த்த வழிபாடும் பின்னர் மாகேசுவரபூசையும் நடைபெற்றன. விழாவில் ஆதீன அன்பர்கள், பலரும், குன்றக்குடி ஐ.டி.ஐ, கல்லூரி மாணவச் செல்வங்கள் பலரும் வருகை தந்து சிறப்பித்தனர்.

———

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி - 630 206

சிவகங்கை மாவட்டம்

தொலைபேசி எண் : 04577 - 264227


இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது
பழநி
பரிமள விலாஸ்
S.சித்தநாதன்

ஜவ்வாது வாசனை விபூதி
&
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்
வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்
அடிவாரம், பழநி – 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406



அரசியல் உலகின் மாதவம்
சிங்கம்புணரி தந்த அறிவுச்செல்வம்
முன்னாள் அமைச்சர்

செ.மாதவன்

அவர்களுக்கு
மக்கள் சிந்தனையின் அஞ்சலி

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-March-May 2018
Price Rs. 8-00
Date of Publication 10-05-2018

பெறுநர்

திரு

C129
திருவருள் திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி அஞ்சல்
காரைக்குடி வழி

அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166